தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 9, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 ஆகஸ்ட் 26, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால் அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

துணை மின் நிலையம்

***55341—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், திருமால் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 ஆகஸ்ட் 26

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், திருமால் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆவியூர் கிராமம், 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து ஆவியூர் 11 கே.வி. மின்னூட்டி வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், பெருகிவரும் மின் பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு, திருமால் கிராமத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேலக்கோட்டை கிராமத்தில் புதியதாக 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்றை பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நிருவாக அனுமதி பெறப்பட்ட பின்னர், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும். திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், திருமால் கிராமத்திற்கு அருகில் உள்ள மேலக்கோட்டையில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளதால் திருமால் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற அடிப்படையில் மக்கள் சேவையை முன் நின்று செயலாற்றிய காரணத்தினால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்கொள்வதற்கு எந்த அரசியல் கட்சிக்கும் தகுதியில்லை என்ற நிலையை ஆர்.கே. நகர் தொகுதி இடைத்தேர்தலில் அந்த மக்கள் வாக்களித்து, இந்திய அளவில் ஒரு மகத்தான வெற்றியைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சூது மதி பிடித்தவர்களின் சூழ்ச்சிகளையெல்லாம் தூள், தூளாக்கி, புடம்போட்ட தங்கம் எனத் தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து நான் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன் என்ற அர்ப்பணிப்பு*

2015 ஆகஸ்ட் 26]

வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன்.

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், திருமால் பகுதிக்கு விருதுநகர் மாவட்டம், ஆவியூரிலிருந்து மின்சாரம் வந்து கொண்டிருப்பதற்கு மாற்றாக மேலக்கோட்டை அருகில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு வரும் முயற்சிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்டத்தில் இதுபோன்று எங்கெங்கு புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் பணிகள் நடைபெறுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட திருமால் கிராமம் பயனடைவது மட்டுமல்லாமல், அதைச் சுற்றியுள்ள கிராமமான மேலக்கோட்டையும் பயன்பெறும்வகையில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேவேளையில், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க, மதுரை மாவட்டத்தில் மட்டும் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 19 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அவற்றில் 5 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை இயக்கப்பட்டு வருகின்றன. மீதியுள்ள 14 துணை மின் நிலையங்களை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றிலும், இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒத்தக்கடை பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பரிட்சார்த்த முறையில் இயக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றது.*

முற்பகல் 10-05

அதேபோல், மதுரை, திருமங்கலம் பகுதியில் 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் இந்த

ஆண்டு அக்டோபர் மாதத்தில் முடிவடைய இருக்கின்றன. மதுரை, உசிலம்பட்டி, வாலாந்தூரில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். மதுரை, திருப்பரங்குன்றம், பொன்மேனி ஆகிய இரண்டு இடங்களில் அரசு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றிற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன், அந்த இடங்களிலும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். அதேபோல, மதுரை கிழக்கு, ஒத்தக்கடையில் பணிகள் 24-8-2015 அன்றுதான் test charge செய்யப்பட்டுள்ளன. அந்தப் பணிகள் மிக விரைவிலே முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துணை மின் உற்பத்தி நிலையம் காணொலி காட்சிமூலமாக விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மதுரை தெற்கு, சுப்பிரமணியபுரம். அங்கும் தேவையான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அதுவும் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம். நிருவாக அனுமதி பெற்றவுடன், அந்தப் பணிகளும் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன. மதுரை மேற்குப் பகுதி எல்லீஸ் நகரிலே 110/33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலமும் கண்டறியப்பட்டு, நிருவாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. அதேபோல, மதுரை மேலூர், ஆலம்பட்டி 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன், பணிகள் தொடங்கப்படும். மதுரை வடக்கு, செல்லூரிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கும் நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மதுரை, மேலூர், திருவாதவூரிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. அரசு நிலமும் கண்டறியப்பட்டுவிட்டது. அங்கும் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் விரைவாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை, உசிலம்பட்டி, எடையப்பட்டியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் அடுத்த நிதியாண்டிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை, பேரையூரிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் புதியதாகத்

2015 ஆகஸ்ட் 26]

தொடங்கப்படவுள்ளது. அதற்கான பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. அடுத்த மாதத்திலேயே அந்தப் பணிகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மதுரை மேற்குப் பகுதி, பனையூரில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க அடுத்த நிதியாண்டிலே பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை கிழக்கு, கடச்சனேந்தலில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க நிலம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் விரைவிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில், இப்பொழுது மதுரை மாவட்டத்திலே 19 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் அத்தனையும் இன்றைக்கு புயல் வேகத்தில் நடைபெற்று வருகின்றன. தொடங்கப்படாமல் இருக்கின்ற பணிகளும் தொடங்கப்படும். ஆங்காங்கு நிலம் கையகப்படுத்துவதிலேதான் பிரச்சினை இருக்கிறது. நிலம் கிடைத்தவுடன் உடனுக்குடன் அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளைத் தொடங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், நிலம் கையகப்படுத்துகின்றபோது பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன.

தனியார் நிலங்களிலே மின் நிலையங்களைப் போட்டால் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். அரசு நிலம் என்றால் விரைவாகப் பெற முடிகிறது. கோயில் நிலங்கள் என்றால், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையிடமிருந்து கையகப்படுத்த வேண்டியுள்ளது. கோயிலுக்குப் பயன்படாத இடங்கள் இருக்கின்றபோது, பெரும்பாலான நேர்வுகளில், அவற்றைத்தான் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பயன்படுத்தி வருகிறது. ஆனால், அதைப் பெறுவதற்கு ஏராளமான நடைமுறைகளை வைத்து, பல்வேறு சிக்கல்களை உருவாக்குகிறார்கள். அதனால், ஓராண்டுக்கு மேல் ஆகிவிடுகிறது. சில இடங்களிலே அந்த நிலங்களைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் ஓராண்டு ஆகியும் அனுமதியே கிடைக்காமலும் இருக்கிறது. சில இடங்களில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை

ஆணையாளர் நிலத்தைத் தர மறுத்துவிடுகிறார். கோயில் நிலங்களை வழங்க முடியாது என்றே சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகளால்தான் துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணி சற்று காலதாமதம் ஆகிறது. ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திட்டமிட்டு, நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளில் இருக்கின்ற இடையூறுகளை, இடர்ப்பாடுகளைக் களைந்து, அனைத்து இடங்களிலும் புதிதாக துணை மின் நிலையங்களை அமைக்கின்ற பணிகளை நிறைவு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட மக்களுடைய மின்சாரத் தேவையினை மனதில் வைத்து, 19 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நடவடிக்கை எடுத்ததற்காக மதுரை மாவட்ட மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமங்கலம் தொகுதியிலுள்ள திருமால் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்குமாறு கேட்டிருந்தேன். அதற்குப் பதிலாக, மேலக்கோட்டையில் அமைக்கவிருக்கிற துணை மின் நிலையத்தை அந்தப் பகுதி மக்களின் தேவைக்காக விரைந்து அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடம் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான இடம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்துகிற பணிகள் இப்பொழுது*

2015 ஆகஸ்ட் 26]

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் முடிந்தவுடன், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

பயணியர் மாளிகை

***34796—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பயணியர் மாளிகை கட்ட அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கையர்க்கோர் அரசி, மாதர்குல தெய்வம், தீயோரின் சூழ்ச்சியால் காவேரியைப் போல் தடைகள் கரைபுரண்டு வரினும் அத்தனையையும் துணிவுடன் சிங்கமென எதிர்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிவாகை சூடி ஐந்தாம் முறையாகத் தமிழக முதல்வராக ஆட்சி செய்யும், எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*